**சுற்றுலா அபிவிருத்தி நிதியம் - 2022**

**------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் கீழ் பேணிச் செல்லப்படும் காசுப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா 575,721,381 ஆன வங்கி மேலதிகப்பற்று மீதியானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இற்று முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதி நிலைமைக் கூற்றில் வங்கி மேலதிகப்பற்று தனியாக காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய நிர்வாகக் கட்டணம் | 7,041,214 | 74,142 | 6,967,072 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும் மற்றும் வேறுபாடுகளைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியவை | 222,393,766 | 150,204,306 | 72,189,460 | ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறித்த பணிக்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர் மருத்துவ விடுப்பில் சென்றுள்ளமையால் இணக்கம் செய்யும் நடைமுறை தாமதமாகியுள்ளது. இது கணக்குகளை முடிவுறுத்தல் தொடர்பில் மற்றும் இந்த மாற்றங்களை உருவாக்குதல் தொடர்பிலும் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும் மற்றும் வேறுபாடுகளைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்திற்கு செலுத்த வேண்டிய | 1,111,968,829 | 751,021,532 | 360,947,297 | ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறித்த பணிக்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர் மருத்துவ விடுப்பில் சென்றுள்ளமையால் இணக்கம் செய்யும் நடைமுறை தாமதமாகியுள்ளது. இது கணக்குகளை முடிவுறுத்தல் தொடர்பில் மற்றும் இந்த மாற்றங்களை உருவாக்குதல் தொடர்பிலும் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும் மற்றும் வேறுபாடுகளைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு செலுத்த வேண்டியவை | 190,623,228 | 128,746,548 | 61,876,680 | ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறித்த பணிக்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர் மருத்துவ விடுப்பில் சென்றுள்ளமையால் இணக்கம் செய்யும் நடைமுறை தாமதமாகியுள்ளது. இது கணக்குகளை முடிவுறுத்தல் தொடர்பில் மற்றும் இந்த மாற்றங்களை உருவாக்குதல் தொடர்பிலும் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும் மற்றும் வேறுபாடுகளைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை மாநாட்டு பணியகத்திற்கு செலுத்த வேண்டிய | 114,911,748 | 94,286,188 | 20,625,560 | ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறித்த பணிக்காக ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர் மருத்துவ விடுப்பில் சென்றுள்ளமையால் இணக்கம் செய்யும் நடைமுறை தாமதமாகியுள்ளது. இது கணக்குகளை முடிவுறுத்தல் தொடர்பில் மற்றும் இந்த மாற்றங்களை உருவாக்குதல் தொடர்பிலும் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும் மற்றும் வேறுபாடுகளைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை சட்டம் | | | |
| (i) | 24 (3) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி வரியின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்கான விதிகள் இப் பிரிவின் பிரகாரம் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிர்வாகச் செலவினம் சபையின் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டமையின் அடிப்படையில் | சுற்றுலா அபிவிருத்தி தீர்வை மற்றும் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்கான விதிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உருவாக்கப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும் ரூபா 7,201,468 தொகையான நிர்வாகச் செலவினங்கள் மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 24 (8) மற்றும் (9) ஆம் பிரிவுகள் | நிதியத்திற்கு கிடைக்கும் அனைத்து பணமும் இலங்கை சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவதற்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபடுத்தல் எனும் நோக்கத்திற்கு முரணாக ரூபா 1,250,000,000 ஆன தொகை ஒரு மாதத்தில் முதிர்வடையும் முதலீடொன்றில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | இணக்கம் அசய்யும் பணிக்கு அதிக காலம் எடுப்பதால், சேகரிக்கப்படும் வரியில் கருத்திற்கொள்ளக்கூடிய அளவானது நியாயமான காலம் கணக்குகளில் செயலற்றுக் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நிதியம் பகிரப்படும் வரையிலும் முதலீடு செய்து வட்டி ஈட்டுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.<br><br>இறுதியில் மொத்த வட்டி வருமானமான ரூபா 26,712,329 தொகையும் நான்கு நிறுவனங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. | நிதியத்திற்கு வைப்புக்களை இணக்கம் செய்தல் உரிய காலத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அது முக்கியமாக 04 நிறுவனங்களுக்கு நிதியத்தினை வழங்குவதற்கு மற்றும் திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் தொடர்பில் தாக்கம் செலுத்தும். |
| (ஆ) | 2018 இன் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் I ஆம் பகுதியின் (3) ஆம் பிரிவு | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து 0.5 சதவீத வரி அறவிடப்பட்ட போதிலும், வரி அறவிடப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 14,114,147 ஆன தொகை திறைசேரிக்கு | TDF வங்கிக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட மொத்த பற்றுச்சீட்டுக்களில் 0.5மு இற்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள், ஏனைய பற்றுச்சீட்டுக்களிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டியதுடன், மேலும் பெரும் எண்ணிக்கையான வைப்புக்கள் TDF கணக்குக்கு செலவு | திறைசேரிக்கு உரித்தான TDL இன் பங்கினை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுப்புவதற்கு 53 முதல் 150 நாட்கள் வரையான வீச்சில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | வைக்கப்பட்டுள்ளமையால் வங்கிக் கணக்குகளை இணக்கம் செய்து, ஒவ்வொரு பற்றுச்சீட்டும் பரிசோதிக்கப்பட்ட பின்னர் அதனை இனங்காண முடியும். இந்த நடைமுறைக்கு பொதுவான காலம் எடுக்கும். எவ்வாறான போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் மருத்துவ விடுப்பினை பெற்றிருந்தமையால் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி இணக்கம் செய்வதற்கு மற்றும் இனங்காண்பதற்கு ஏனைய நாட்களை விட அதிக காலம் கடந்தது. எனவே, சேகரிக்கப்பட்ட 0.5% TDL இனை சேகரிக்கப்பட்டு 30 நாட்களினுள் திறைசேரிக்கு அனுப்ப முடியாதிருந்தது. | |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான (SOE) செயல்வழிக் கோவையின 6.6 ஆம் பந்தி | நிதியாண்டு நிறைவடைந்து அறுபது (60) நாட்களினுள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்காக சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள், முறையான மனிதவள முகாமைத்துவம் இல்லாத காரணத்தால் 2023 மே 10 ஆந் திகதி 70 நாட்கள் தாமதத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதியாண்டு நிறைவடைந்து அறுபது (60) நாட்களினுள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 4,082,016,673 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 1,313,694,142 ஆகும். அதற்கிணங்க நிதிப் பெறுபேறுகளில் ரூபா 2,768,322,531 ஆன அதிகரிப்பொன்று காணக்கூடியதாக காணப்பட்டது. கப்பலேற்றும் வரி ரூபா 2,113,882,345 இனால் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரி ரூபா 616,120,939 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 116,567,818 தொகை வங்கிக்கு நேரடியாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை முறையாகக் கண்டறிந்து பின்னர் கணக்குகளுக்குக் கொண்டுவரப்படுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் தொடர்ச்சியாக கொண்டுவரப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது தொடர்ச்சியான மீதியல்ல.<br><br>நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமை மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரணமாக SLTDA இற்கு வருகைதராது பணம் செலுத்தும் புதிய நடைமுறையொன்று எம்மால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், வரி செலுத்துபவர்களின் சிலர் இணைய வழியின் ஊடாக மற்றும் இயந்திரத்தின் மூலமான வைப்புக்கள் எனும் முறைகளை பயன்படுத்தி பணம் வைப்பு செய்தல் தொடர்பில் விபரங்களை குறிப்பிடாது கொடுப்பனவு செய்துள்ளனர். 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளினுள் தெளிவற்ற தொகையை படிப்படியாக அதிகரித்தமைக்கான காரணம் இதுவாகும். இனங்காணப்படாத வரித் தொகையின் தேறிய தொகை ரூபா 116,567,818 ஆக காணப்பட்டதுடன், செலுத்துபவரின் தகவல் இல்லாமையால் அதனை இதுவரையிலும் TDL ஆக இனங்காண்பதற்கு முடியாத இறுதிக் கணக்கில் காண்பிக்கப்படுகின்றது. செலுத்தியவர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | செலுத்துபவரை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |